Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 69

செவ்வாய்க்கிழமை
03 பெப்ரவரி 2026

தை 20 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## திசைகாட்டி எம்.பி.க்கு பிடியாணை

கொழும்பு, பெப். 3
தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் மனுவர்ணவுக்கு எதிராக கோட்டை நீதவான் நீதிமன்றத்தால் நேற்றுப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.
வழக்கு ஒன்றுக்கு முன்னிலையா »11



# இனப்பரம்பலை மாற்றும் கூட்டுச்சதியே கிவுல் ஓயா

### உடன் கைவிடப்பட வேண்டும் என வவுனியா வடக்கில் மக்கள் போர்

வவுனியா, பெப்ரவரி 3
தமிழ் மக்களின் நிலங்களை ஆக்கிரமித்து, இனப்பரம்பலை மாற்றியமைக்கும் வகையில் முன்னெடுக்கப்படும் கிவுல் ஓயா திட்டத்துக்கு எதிராக, ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் இணைந்து வவுனியா வடக்கில் நேற்றுப் போராட்டத்தையும் பேரணியையும் முன்னெடுத்தனர். »11

முல்லைத்தீவு – குரவில் படுகொலை

## குற்றவாளிக்கு மரணதண்டனை!

கிளிநொச்சி, பெப். 3
முல்லைத்தீவு - உடையார்கட்டு - குரவில் கிராமத்தில், 2014ஆம் ஆண்டு இடம்பெற்ற படுகொலையுடன் தொடர்புடைய குற்றவாளிக்கு நேற்று மரண தண்டனை விதித்துத் தீர்ப்பு வழங்கப்பட்டது.
முல்லைத்தீவு உடையார்கட்டு குரவில் கிராமத்தில், கடந்த 2014ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11ஆம் திகதி பூப்புனித நீராட்டு விழா »11

## தங்க விலை சரிவு

விரிவு பக்கம்:-05



## இராணுவ வாகனம் மோதி மயிலிட்டியில் முதியவர் சாவு!

யாழ்ப்பாணம், பெப். 3
யாழ்ப்பாணம் - மயிலிட்டியில் நேற்று மாலை இராணுவ வாகனம் மோதி முதியவர் ஒருவர் உயிரிழந்தார். மயிலிட்டி பகுதியைச் சேர்ந்த நவரட்ணம் என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
சைக்கிளில் சென்ற முதியவரை, இராணுவ வாகனம் மோதியதிலேயே இந்த இறப்புச் சம்பவித்துள்ளது. »11

## தெளிவான கொள்கை சஜித்திடம் இல்லை!

### எதிர்க்கட்சிகள் பிடுங்குப்பாடு

கொழும்பு, பெப். 3
ஒற்றையாட்சி உள்ளிட்ட விடயங்களில் சஜித் பிரேமதாஸவிடம் தெளிவான கொள்கை இல்லை என்று, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலர் சாகர காரியவசம் தெரிவித்தார்.
பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று »11

## அநுர அரசாங்கம் கவிழ்வது உறுதி!

### சுதந்திரக்கட்சி காட்டம்

கொழும்பு, பெப். 3
ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் விரைவில் கவிழும் என்று, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் முக்கியஸ்தர் நிமல் சிறிபாலடி சில்வா தெரிவித்தார்.
அரசாங்கத்தின் அண்மைக்காலச் செயற்பாடு »11


## கடலாமை இறைச்சியுடன் 3 சந்தேகநபர்கள் கைது!



மன்னார், பெப். 3
மன்னார் - நாச்சிக்குடா கடற்கரைப் பகுதியில் கடலாமை இறைச்சி மற்றும் ஆமை முட்டை என்பவற்றுடன் மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
கடற்படையினர் முன்னெடுத்த »11

## சபாநாயகர் விக்ரமரத்னவுக்கு எதிராக ஊழல் ஒழிப்புப் பிரிவில் முறைப்பாடு!

கொழும்பு, பெப். 3
சபாநாயகர் விக்ரமரத்னவுக்கு எதிராக கையூட்டல் ஒழிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.
சபாநாயகரால் அண்மையில் பணியிடை நீக்கம் செய்யப்பட்ட நாடாளுமன்ற முன்னாள் பிரதி பொதுச்செயலாளர் சமிந்த »11



முரசொலி முராரி

"கடுகளவு சரிஞ்சு போட்டு மலையளவு ஏறிக்கொண்டே இருக்கிறதுக்குப் பேர்தான் தங்கம் கண்டியளோ"

## வயிற்றோட்டத்தால் சிறுவன் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், பெப். 3
யாழ்ப்பாணம் கோண்டாவில் பகுதியைச் சேர்ந்த சிறுவன் ஒருவன், தொடர்ச்சியான வயிற்றோட்டம் காரணமாக நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்தான்.
நிகிந்தன் தர்மிகன் (வயது-11) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான். தொடர் வயிற்றோட்டம் காரணமாக யாழ்ப்பாணம் போதனா »11

## ஈழத்தமிழர் படுகொலைக்கு சர்வதேச விசாரணை தேவை

### சென்னையில் கையெழுத்துப் போராட்டம்

கொழும்பு, பெப். 3
ஈழத்தில் இடம்பெற்ற தமிழர் இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணை அவசியம் என்று வலியுறுத்தி, சென்னையில் கையெழுத்துப் போராட்டம் இடம்பெற்று வருகின்றது.
ஈழத்தமிழர்கள் மீதான இனப்படுகொலைக்கு நீதி கோரி தன்னுயிரை ஆகுதியாக்கிய முத்துக்குமாரின் 17ஆவது ஆண்டு நினைவை முன்னிட்டே »11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 02.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4335 |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கங்கள் | 02 04 24 70 |
| விசேட எழுத்து | Z |

| ஹந்தஹனே ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 02.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1402 |
| வெற்றி இலக்கினம் | கும்பம் |
| வெற்றி இலக்கங்கள் | 06 25 26 33 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 02.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0361 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 0 2 3 7 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 02.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2441 |
| ஆங்கில எழுத்து | X |
| சுப்பர் இலக்கம் | 20 |
| வெற்றி இலக்கங்கள் | 53 57 66 67 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 02.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6093 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கங்கள் | 1 2 2 8 7 9 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 02.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2123 |
| ஆங்கில எழுத்து | I |
| வெற்றி இலக்கங்கள் | 01 61 73 77 |
| விசேட எழுத்து | I |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 02.02.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0209 |
| வெற்றி இலக்கினம் | துலாம் |
| வெற்றி இலக்கங்கள் | 06 08 28 |

# ‘கிவுல் ஓயா’ திட்ட அபிவிருத்தி கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு

## வடக்கு – கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு குற்றச்சாட்டு

**யாழ்ப்பாணம், பெப்.3**

**அரசாங்கத்தால் முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களை மையமாகக் கொண்டு முன்னெடுக்கப்படும் ‘கிவுல் ஓயா’ திட்டம் சிறுபான்மையின மக்களின் பாதுகாப்பு மற்றும் சமத்துவமான அபிவிருத்தி குறித்த அரசின் உறுதிமொழிகளுக்கு முரணானது என வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக்குழு தெரிவித்துள்ளது.**

வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக்குழு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

மகாவலி அதிகாரசபையின் திட்ட வரைபடத்தின்படி, வவுனியா வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வெடிவைத்த கல்லு, ஈச்சங்குளம், கூழாங்குளம், காட்டு பூவரசங்குளம் மற்றும் காஞ்சூர மோட்டை உள்ளிட்ட பாரம்பரிய கிராமங்களின் 400 ஏக்கருக்கும் மேற்பட்ட விவசாய மற்றும் குடியிருப்பு நிலங்கள் நீரில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

1921 ஆம் ஆண்டு வர்த்தமானி மூலம் பாதுகாக்கப்பட்ட வனமாக அறிவிக்கப்பட்ட ‘கட்டிக்குளம் ஒதுக்குக்காடு’ பகுதியில் உள்ள சுமார் 4 ஆயிரம் ஏக்கர் பரப்பளவு இந்தத் திட்டத்தின்கீழ் முழுமையாக நீரில் மூழ்கவுள்ளது. இது சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்தும்.

வவுனியா வடக்கில் அடையாளம் காணப்பட்டுள்ள 47 தொல்லியல் பிரதேசங்கள் இந்தத் திட்டத்தால் அழியவுள்ளன என்று மகாவலி அதிகாரசபையின் ஆவணங்களே தெரிவிக்கின்றன. வெடுக்குநாறி மலையில் வழிபாடுகளைத் தடுக்கத் தொல்லியல் சட்டத்தைப் பயன்படுத்தும் அரசு, 47 இடங்களை நீரில் மூழ்க அனுமதிப்பது ஏன்? அரசு உடனடியாக இந்தத் திட்டத்தின் சமூக மற்றும் சுற்றுச்சூழல் தாக்கங்களை மீளாய்வு செய்ய வேண்டும். வெளிப்பிரதேச குடியேற்றங்களைத் தவிர்த்து, உள்ளூர் மக்களின் பூர்விக நிலங்கள் மற்றும் அடையாளங்களைப் பாதுகாக்கவேண்டும்- என்றுள்ளது. (ச-56)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 02.02.2026 |
| தினம் | திங்கட்கிழமை |
| வெற்றி வாரம் | 0801 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கம் | 5 8 9 6 2 3 |

| Super Ball (DLB) | |
|---|---|
| திகதி | 02.02.2026 |
| தினம் | திங்கட்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3067 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கம் | 06 23 46 80 |

| சனிதா (DLB) | |
|---|---|
| திகதி | 02.02.2026 |
| தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கம் | 16 22 70 72 |
| வெற்றி வாரம் | 5228 |

| SASIRI (DLB) | |
|---|---|
| திகதி | 02.02.2026 |
| தினம் | திங்கட்கிழமை |
| வெற்றி வாரம் | 0897 |
| வெற்றி இலக்கம் | 23 25 34 |

| லக்ன ராசி (DLB) | |
|---|---|
| திகதி | 02.02.2026 |
| தினம் | திங்கட்கிழமை |
| | மேஷம் |
| வெற்றி இலக்கம் | 25 35 51 57 |
| சீட்டிழுப்பு வாரம் | 4779 |

| KAPRUKA (DLB) | |
|---|---|
| திகதி | 02.02.2026 |
| தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | E |
| சுப்பர் இலக்கம் | 03 |
| வெற்றி இலக்கம் | 45 50 66 68 |
| வெற்றி வாரம் | 2243 |

| அத கோடிபதி (DLB) | |
|---|---|
| திகதி | 02.02.2026 |
| தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கம் | 44 53 61 68 |
| வெற்றி வாரம் | 2893 |

## மின்னல் அபாயம்




கொழும்பு, பெப்.3

நாட்டின் பல பகுதிகளுக்கு மின்னல் அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மேல், சப்ரகமுவ மாகாணங்களிலும், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும் சாத்தியம் நிலவுகிறது. இடியுடன் கூடிய மழை பெய்யும்போது தற்காலிகமாக பலத்த காற்று வீசக்கூடும். மின்னல் ஏற்படும்போது, வீட்டினுள் இருத்தல், மரங்களுக்கு அடியில் இருக்கவேண்டாம், நெல் வயல்கள், தேயிலைத் தோட்டங்கள் மற்றும் திறந்த நீர்நிலைகள் போன்ற திறந்தவெளிகளைத் தவிர்க்கவும். அவசர உதவிக்கு உள்ளூர் அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகளைத் தொடர்புகொள்ளவும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச)

## துப்பாக்கி மாயம்; பொலிஸார் கைது

கொழும்பு, பெப்.3

மத்துகம பொலிஸ் நிலையத்தில் தோட்டாக்களுடன் கைத்துப்பாக்கி ஒன்று காணாமற்போன சம்பவம் தொடர்பில் அந்தப் பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் பரிசோதகர் மற்றும் கான்ஸ்டபிள் ஆகியோர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர். ஆவணங்களைப் பரிசோதித்தபோதே, கடந்த ஜனவரி 26ஆம் திகதி முதல் அவை காணாமற்போயுள்ளமை தெரியவந்துள்ளது. (ச-இ)





## முச்சக்கரவண்டிகள் விபத்தில் 7 பேர் காயம்

வவுனியா, பெப்.3

வவுனியா, பூந்தோட்டம் பிரதான வீதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் இரண்டு பெண்கள் உட்பட ஏழு பேர் படுகாயமடைந்தநிலையில் வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வவுனியா நகரிலிருந்து பூந்தோட்டம் பகுதியை நோக்கிப் பயணித்த முச்சக்கரவண்டியும், பூந்தோட்டம் பகுதியிலிருந்து வவுனியா நகரை நோக்கி வந்துகொண்டிருந்த மற்றுமொரு முச்சக்கரவண்டியும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

விபத்துத் தொடர்பில் வவுனியா போக்குவரத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர். (ச-110)

# 30 வருடங்கள் சிறைவாசம் போதும் அரசியற்கைதிகளை விடுவியுங்கள்

## குரல் அற்றவர்களின் குரல் அமைப்பு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.3

30 வருடங்களுக்கு மேலாக சிறைகளில் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்துக்கொண்டிருக்கும் அரசியற்கைதிகளை விடுவிக்க, அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று குரல் அற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன் கோரிக்கை விடுத்துள்ளார். யாழ். சிவகுரு ஆதீனத்தில் முன்னெடுக்கப்பட்ட “நீதிக்கான சாட்சி” என்ற போராட்டத்தில் அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

30 வருடங்களுக்கு மேலாக சிறைவாசம் அனுபவித்துவரும் அரசியல் கைதிகளின் ஆயுள் குறைவடைந்து செல்கின்றது. 30 ஆண்டுகள் என்பது ஒரு மனிதனுடைய வாழ்க்கையின் அரைவாசிக் காலம். மீதிக் காலத்திலாவது அவர்கள் தமது உறவுகளுடன் சேர்ந்து வாழவேண்டும். தற்போதுள்ள அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒரு வருடம் கடந்த நிலையிலும், ஒரு அரசியற்கைதிகூட இதுவரை விடுதலை செய்யப்படவில்லை. அரசியல் ரீதியான தீர்மானங்களை எடுத்து, அரசியற்கைதிகளின் விடுதலை உறுதிப்படுத்தப்படவேண்டும்-என்றார். (க-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


### கடந்த ஆண்டில்

# வாகன இறக்குமதிக்கு 2 பில். டொலர் செலவு

கொழும்பு, பெப்.3
2025ஆம் ஆண்டில் இலங்கையின் வாகன இறக்குமதிச் செலவு 2 பில்லியன் டொலரைக் கடந்துள்ளது.
டிசெம்பர் மாதத் தரவுகளுக்கு அமைய, இலங்கை மத்திய வங்கி இந்த விடயத்தை அறிவித்துள்ளது.
2025ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் மட்டும் தனிப்பட்ட மற்றும் வணிகத் தேவைகளுக்காக 301 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான வாகனங்கள் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.
2025ஆம் ஆண்டில் மொத்த வாகன இறக்குமதிச் செலவு 2.047 பில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## திரைப்படப் பாடசாலை ஆரம்பிக்க நடவடிக்கை

கொழும்பு, பெப்.3
இலங்கையின் சினிமாத்துறையை சர்வதேசத் தரத்துக்கு உயர்த்துவதற்காக தேசிய திரைப்படப் பாடசாலை ஒன்றை நிறுவுவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கலைகள் மற்றும் கலாசார அலுவல்கள் பற்றிய நாடாளுமன்ற ஒன்றியத்தின் தலைமையில் இதற்கான கலந்துரையாடல் அண்மையில் இடம்பெற்றது. வெகுசன ஊடக அமைச்சின் கீழுள்ள இலங்கை மன்றக் கல்லூரி மற்றும் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றில் ஏற்கெனவே உள்ள வளங்களைப் பயன்படுத்தி இந்தப் பாடசாலையை ஆரம்பிக்க உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. இது வெறும் ஏட்டுக்கல்வியுடன் நின்றுவிடாமல், நடைமுறை ரீதியாக திரைப்படங்களைத் தயாரிக்கும் வல்லமை கொண்ட கலைஞர்களை உருவாக்கும் பாடநெறிகளைக் கொண்ட நிறுவனமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.
இந்தத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் மனுவர்ண தலைமையில், துறைசார் நிபுணர்கள் உள்ளடங்கிய விசேட தொழில்நுட்பக் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## சிறுவயதுக் கர்ப்பங்கள்; கடந்தாண்டு அதிகரிப்பு

கொழும்பு, பெப்.3
18 வயதுக்குட்பட்ட சிறுமிகள் கர்ப்பமடைவது 2024ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடந்த ஆண்டில் அதிகரித்துள்ளது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை வெளியிட்டுள்ள சமீபத்திய தரவு அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அந்த அறிக்கையின்படி 2025ஆம் ஆண்டில் 79 பேரும், 2024இல் 53 பேரும் கர்ப்பமாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.
கடந்தாண்டு சிறுவர்கள் தொடர்பாக மொத்தம் 10,455 முறைப்பாடுகள் பெறப்பட்டுள்ளதாகவும், ஒக்ரோபர் மாதத்தில் அதிக எண்ணிக்கையிலான முறைப்பாடுகள் பெறப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

## நாளைய கரிநாள் போராட்டத்துக்கு மல்லாவி வர்த்தகர்களும் ஆதரவு!

கிளிநொச்சி, பெப். 3
ஸ்ரீலங்காவின் சுதந்திரதினத்தை கரிநாளாக அடையாளப்படுத்தும் வகையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் முன்னெடுக்கப்படும் போராட்டத்துக்கு மல்லாவி வர்த்தகர்கள் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.
இது தொடர்பில் மல்லாவி வர்த்தக சங்கத்தின் தலைவர் விஜயகுமார் தெரிவித்ததாவது:-
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கடந்த 29ஆம் திகதியன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கரிநாள் போராட்டம் தொடர்பான அறிவிப்பு விடுக்கப்பட்டதுடன், அனைவருடைய ஒத்துழைப்பையும் மாணவர்கள் கோரினார்கள். அவர்களின் கோரிக்கைக்கு அமைய, மல்லாவி வர்த்தக சமூகத்தினராகிய நாம், சுதந்திர தினத்தன்று அனைத்து வணிக மன்றங்களையும் பூட்டி போராட்டத்துக்கு ஆதரவு வழங்குகின்றோம் - என்றார். (ம-35)

## இரவுப் பணியில் பெண்கள் இறுக்கமான நடைமுறைகள்

### விசேட வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, பெப்.3
உணவகங்களில் உணவு பரிமாறுபவர்களாகவும், துப்புரவுப் பணியாளர்களாகவும் பெண்களை இரவு நேரங்களில் பணியில் அமர்த்துவதற்கு கடுமையான நிபந்தனைகளுடன் அரசாங்கம் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளது.
தொழில் அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோவினால், 'கடைகள் மற்றும் அலுவலக ஊழியர்கள் சட்டத்தில்' மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் மூலம் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இரவு நேரப் பணியில் ஈடுபடுத்தப்படும் பெண்களின் பாதுகாப்புத் தொடர்பில் தொழில் அமைச்சு கடுமையான நிபந்தனைகளை விதித்துள்ளது.
பணி முடிந்து வீடு திரும்ப அல்லது பணிக்கு வர போக்குவரத்து வசதி தேவைப்படின் பொருத்தமான மற்றும் பாதுகாப்பான தங்குமிடங்கள், சுகாதார வசதிகள் மற்றும் நலன்புரி விடயங்கள் தொடர்பிலும் தொழில் வழங்குநர்களே முழுமையான பொறுப்பை ஏற்க வேண்டும் என வர்த்தமானியில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ச-இ)




## வேலியில ஓணானும் வேர்ல்ட் கப்பும்

நல்லூர் முருகன் என்டாலே அது ஒரு தனி ராச்சியம். ஆனானப்பட்ட இந்தியப்பிரதமர் மோடி கட சேர்ட்டைக் கழட்டிப் போட்டு, பூசை நேரத்துக்கு வந்தால் தான் கும்பிடலாம் எண்டு துணிச்சலாச் சொன்ன கோயில். அதால நல்லூர்ப் பிள்ளானை மாத்தி கீரிமலைக்கு மோடி போகவேண்டி வந்தது வேற கதை ஒழுக்கமும், புனிதமும் தான் நல்லூரில முதலிடம். நல்லூர்க் கோயில் ஏரியாவைச் சுத்தி ஒரு கம்பி வேலை போட்டிருக்கு. அந்த வேலிக்குள்ள வாகனத்திலயோ, செருப்பு போட்டுக்கொண்டோ போக ஏலாது எண்டது ஊருக்கே தெரிஞ்ச விசயம். அதிலயும் இந்த கலியாணவீடு, சாமத்திய வீட்டுக்கு வீடியோ எடுக்கிறம் எண்டு ஆராவது கமெராவைத் தூக்கிக்கொண்டு போனால், அங்கால நிக்கிற 'சிவப்புச் சால்வைக்காரர்' பாய்ஞ்சு வருவினம் என்டது எல்லாருக்கும் அத்துப்படி. இதெல்லாம் தெரிஞ்சும் ஒரு குரூப் அங்க வலியப் போய் வில்லங்கத்தை விலைக்கு வாங்கியிருக்கினம்.

முந்தநாள் தைப்பூசம். முருகன்ர முக்கியமான திருவிழாக்களில தைப்பூசமும் ஒண்டு. அதுக்காக நல்லூர் முருகன் வெளிவீதியுலா வாறதுக்காக வசந்த மண்டபத்தில பூசை முடிஞ்சு, சாமி தூக்க எல்லாரும் ரெடியாகிக் கொண்டிருந்தினம். அப்ப எங்கையிருந்து வந்தினமோ தெரியேலை ,ஒரு கோட் சூட் போட்டு, ரையெல்லாம் கட்டிக்கொண்டு கொஞ்சப்பேர் 'ரி-20' உலகக் கிண்ணத்தை நல்லூரில வேலியைத் தாண்டி உள்ளுக்க கொண்டந்து வச்சுப் படம் எடுக்கத் தொடங்கிட்டினம். இதைப் பார்த்த நல்லூர் நிர்வாகம், இது விளையாடுற இடமில்லை, கப்பைத் தூக்கிக்கொண்டு வெளியில போங்கோ எண்டு கொஞ்சம் இறுக்கமாச் சொல்லித் வேலிக்கு வெளியால அனுப்பிப்போட்டினம்.பிறகு அந்த 'வேர்ல்ட் கப்பை' வேலிக்கு வெளியில கொண்டந்துவைச்சு, கோபுரம் தெரியிறமாதிரி படங்களை எடுத்துக்கொண்டு அந்த கோட்சூட் கும்பல் போட்டுது. நல்லூர் நிர்வாகத்துக்கோ, நடைமுறைக்கோ பழக்கமில்லாத இந்த கோட்சூட் கும்பல்காரர் ஒருக்கா முதலே அங்க போய்க் கதைச்சு சரியானபடி ஒழுங்கு செய்திருக்கலாம். அதை விட்டிட்டு, வேலியில கிடந்த ஓணானை வேட்டிக்குள்ள விட்டமாதிரி , நல்லூர்க்கோயில் வேலிக்குள்ள வேல்ர்ட் கப்பைகொண்டுபோனால் குடைச்சல் வரும் தானே.

அதைவிடப் பெரிய கொடுமை என்னவெண்டால், உந்த ரி-20 உலகக்கிண்ணத்துக்கு மாவட்டச் செயலகத்தில குடுத்த வரவேற்புத்தான் . எங்கட யாழ்ப்பாணத்துக்கு உலகக்கிண்ணம் வருது எண்டால், இஞ்ச இருக்கிற மேளக்கச்சேரி, நாதஸ்வரம், கரகாட்டத்தை வைச்சு வரவேற்காமல், கண்டியன்ஸ் டான்ஸ் ஆடித்தான் வரவேற்றவை. அதோட ஒப்புக்குச் சப்பாணியா அதே சிங்கள ஆக்களை வைச்சு, சின்னதா பரதநாட்டிய ஸ்டெப்ஸூம் போட்டவை. அவை பரதம் ஆடுறதை விட பினாட்டுப் பாயில குரங்கு நடக்கிறது கொஞ்சம் வடிவா இருந்திருக்கும். 'வேர்ல்ட் கப்' யாழ்ப்பாணம் வந்தது செய்தியில்லை, ஆனால் நல்லூரிலையும் மாவட்டச் செயலகத்திலயும் நடந்த இந்தச் 'சொதப்பல்கள்' தான் இப்ப ஊர் முழுக்கப் பேச்சாக் கிடக்கு கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**‘டித்வா’ புயல் பாதிப்பு**

# வடக்கு நன்னீர் மீனவர்களுக்கு 45.5 மில்லியன் ரூபா நிவாரணம்

**கொழும்பு, பெப்.3**

**‘டித்வா’ சூறாவளி மற்றும் வெள்ளப்பெருக்கினால் வாழ்வாதாரத்தை இழந்த வடக்கு மாகாண நன்னீர் மீனவ சமூகத்துக்கு 45.5 மில்லியன் ரூபா நிதி நிவாரணம் வழங்கும் விசேட நிகழ்வு கொழும்பில் நடைபெற்றது.**

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பாதிக்கப்பட்ட மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகளிடம் காசோலைகள் கையளிக்கப்பட்டன. தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் திரட்டப்பட்ட தரவுகளின் அடிப்படையில், 28க்கும் மேற்பட்ட கிராமிய மீனவர் அமைப்புகளுக்கு இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

நாடு முழுவதும் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்காக ஒதுக்கப்பட்ட 226 மில்லியன் ரூபாவில், வடக்கு மாகாணத்தின் கிளிநொச்சி, மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு இந்த நிதி பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. சேதமடைந்த படகுகளைத் திருத்துவதற்கு 142 பயனாளிகளுக்குத் தலா ஒரு இலட்சம் ரூபா வீதம் 14.2 மில்லியன் ரூபா வழங்கப்பட்டது.

புதிய வலைகளைக் கொள்வனவு செய்ய 473 மீனவர்களுக்கு 31.32 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இரணைமடு, வவுனிக்குளம், முத்துஐயன்கட்டு மற்றும் அக்கராயன் குளம் போன்ற பிரதான நன்னீர்த் தேக்கங்களை அண்டிய மீனவர் சங்கங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. (ச-26)



## வீதிப்புனரமைப்பு

யாழ்ப்பாணம், பெப்.3

கொழும்புத்துறை இலந்தைக்குளம் வீதி மற்றும் அரியாலை நாயன்மார் வீதி என்பவற்றைப் புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

புனரமைப்புப் பணிகள் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரனால் ஆரம்பிக்கப்பட்டன. கடந்த பல வருடங்களாக புனரமைப்பின்றி சேதமடைந்த நிலையிலுள்ள இந்த வீதிகள் ‘மறுமலர்ச்சிக்கான பாதை’ எனும் கிராமிய பாதைகளுக்கான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் காப்பெற் வீதியாக புனரமைக்கப்படவுள்ளன. (எ-41-17)

## பொலிஸார் மீது தாக்குதல்; கும்பல் கைது

கொழும்பு, பெப்.3

கல்வலயாய பிரதேசத்தில் பொலிஸ் அதிகாரிகள்மீது தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படும் கும்பல் ஒன்று மகாஓயா பொலிஸாரால் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளது.

போதைப்பொருள் சோதனை நடவடிக்கையின்போதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## சிசுவொன்றின் சடலம்; வாவியிலிருந்து மீட்பு!

நுவரெலியா, பெப்.3

நுவரெலியா கிரகரி வாவியின் கரையோரத்தில் புதிதாக பிறந்த சிசுவொன்றின் சடலம் ஒன்று நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

நுவரெலியா பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து குறித்த சிசுவின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. சிசுவின் தொப்புள்கொடியின் ஒரு பகுதி இருப்பதால், இந்தப் பிரசவம் மருத்துவமனையில் நடைபெற்ற ஒன்றாக இருக்காது எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (ச-இ)

## இரத்ததான முகாம்

யாழ்ப்பாணம், பெப்.3

பருத்தித்துறை ஆதாரமருத்துவமனையின் இரத்த வங்கியில் காணப்படும் குருதிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக இரத்ததான முகாம் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் எதிர்வரும் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை பிரதேசசபையும், பருத்தித்துறை 521 ஆவது காலாட்படை படையணியும் இணைந்து இந்த முகாமை ஏற்பாடு செய்துள்ளன. (எ-41-100)

# ‘ஐஸ்’ போதையுடன் இளம் தம்பதி கைது!

புத்தளம், பெப்.3

புத்தளம் பொலிஸாரின் நச்சுப் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனையின்போது, சுமார் 80 இலட்சம் ரூபா பெறுமதியான ஐஸ் போதைப்பொருளுடன் இளம் தம்பதியினர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஆனைமடுவ பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய கணவனும், 23 வயதுடைய மனைவியுமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து 524 கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட கார் என்பன பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் தமது பாட்டியின் வீட்டில் தங்கியிருந்து, அங்கிருந்தே போதைப்பொருள் விநியோகத்தை முன்னெடுத்து வந்துள்ளனர் என விசாரணையில் தெரிய வந்துள்ளது. இந்த வலையமைப்பின் பின்னணியில் உள்ள ஏனைய நபர்களைக் கண்டறியும் நோக்கில், சந்தேகநபர்களைத் தடுத்துவைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுக்கப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-இ)

## இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** அனுகூலமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். வாழ்க்கைத்துணைவழியில் மகிழ்ச்சி தரும் செய்தி வந்து சேரும். சிலருக்கு தாயின் தேவைகளை நிறைவேற்றி, அவருடைய ஆசிகளைப் பெறும் வாய்ப்பு உண்டாகும்.

**இடபம்:** உற்சாகமான நாளாக அமையும். எதிர்பாராத பொருள்வரவுக்கு வாய்ப்பு உண்டு. அரசாங்கக் காரியங்கள் சற்றுத் தாமதமாகத்தான் முடியும். புதிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டாம்.

**மிதுனம்:** இன்று எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்குப் புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். சகோதரவகையில் செலவுகள் ஏற்படக்கூடும் என்றாலும், அதனால் மகிழ்ச்சியே ஏற்படும்.

**கடகம்:** மகிழ்ச்சியான நாள். தேவையான பணம் கையில் இருக்கும். இளைய சகோதரர் கேட்கும் உதவியைச் செய்வீர்கள். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**சிம்மம்:** மனதில் இனந்தெரியாத உற்சாகம் பெருக்கெடுக்கும். ஆனால், புதிய முயற்சி எதையும் இன்று தொடங்கவேண்டாம். திடீர்ச் செலவுகளால் கையிருப்புக் கரைவதுடன் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும்.

**கன்னி:** அரசாங்க அதிகாரிகளால் காரிய அனுகூலம் உண்டாகும். முக்கியமான முடிவுகளை பிற்பகலுக்குமேல் மேற்கொள்வது சாதகமாகமுடியும்.

**துலாம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். மாலையில் குடும்பத்துடன் வெளியிடங்களுக்குச் சென்றுவருவீர்கள்.

**விருச்சிகம்:** வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது கவனமாக இருக்கவும்.

**தனுசு:** புதிய முயற்சி எதுவும் இன்றைக்கு வேண்டாம். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும் போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.


**மகரம்:** சிலருக்குப் பணியின் காரணமாக பயணம்மேற்கொள்ளநேரிடும். மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி ஏற்படும்.

**கும்பம்:** பிற்பகலுக்குமேல் அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாகமுடியும். தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**மீனம்:** பிள்ளைகள்வழியில் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். வெளியூர்ப்பயணங்களையும், வெளியிடங்களில் சாப்பிடுவதையும் தவிர்ப்பது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



## பொய்யாமொழி

**மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்
ஆகுல நீர பிற**

**பொருள்:** ஒருவன் தன் மனதில் குற்றம் இல்லாதவனாக இருக்கவேண்டும்; அறம் அவ்வளவே; மனத்தூய்மை இல்லாத மற்றவை ஆரவாரத்தன்மை உடையவை.

# பிரஜா சக்தியெனும் நிழல் அதிகாரம்

இலங்கையின் உள்ளூராட்சி நிர்வாகக் கட்டமைப்பில் 'பிரஜாசக்தி' எனும் பெயரோடு, தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ள புதிய திட்டம் தற்போது பெரும் அரசியல் விவாதப்பொருளாக மாறியுள்ளது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் இந்தத் திட்டமானது, வறுமை ஒழிப்பு மற்றும் மக்கள் பங்கேற்பு என்ற போர்வையில் அறிமுகப்படுத்தப்பட்டாலும், அதன் பின்னணியில் உள்ள ஜனநாயக விரோதப்போக்குகள் கவலையளிக்கின்றன. ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனும், வடக்கு மாகாணத்தின் பல உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்களும் சுட்டிக்காட்டுவது போல, மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட சபைகளுக்கு நிகராக, ஒரு தனிப்பட்ட கட்சியின் அரசியல் நிகழ்ச்சிநிரலை முன்னெடுக்கும் 'சமாந்தரக் கட்டமைப்பை' உருவாக்குவதென்பது நிர்வாகச் சீர்குலைவுக்கே வழிவகுக்கும். 2005-இல் சுனாமி மீள்கட்டுமானத்துக்காக உருவாக்கப்பட்ட விசேட செயலணிகளை எதிர்த்து உச்சநீதிமன்றம் சென்ற இதே ஜே.வி.பி.யினர், இப்போது அதே சட்டக் கோட்பாட்டை மீறிச் செயற்படுவது அவர்களின் அரசியல் கொள்கை முரண்பாட்டையே அப்பட்டமாக வெளிச்சம் போட்டுக்காட்டியுள்ளது.

அரசஉத்தியோகத்தர்களின் மெத்தனப் போக்கைத் தட்டிக்கேட்கவும், சேவைகளை விரைவுபடுத்தவும் மக்கள் குழுக்கள் அவசியம் என்பதாலேயே பிரஜா சக்தித் திட்டத்தைக் கொண்டுவந்ததாக அரசாங்கம் கூறுகின்றது. ஆனால், 'அரச ஊழியர்கள் மீது நம்பிக்கையில்லை' என்று தேசிய மக்கள் சக்தியினர் முன்வைத்த வாதம் மிகவும் அபத்தமானதும், ஆபத்தானதும்கூட. இது ஒட்டுமொத்த அரசநிர்வாக இயந்திரத்தையும் அவமதிப்பதோடு, கட்சி விசுவாசிகளை நிர்வாகத்தின் குறுக்கே அமரவைக்கும் ஒரு சூழ்ச்சியாகவே பார்க்கப்படவேண்டும். உள்ளூராட்சி சபைகளின் அதிகாரங்களைப் பறிப்பதன் மூலம், மக்கள் தங்கள் பிரச்சினைகளுக்காகத் தாம் தெரிவு செய்த சபை உறுப்பினர்களிடம் செல்வதை விடுத்து, கட்சிசார்ந்த நபர்களிடம் கையேந்தும் ஒரு கலாசாரத்தையே இந்தத்திட்டம் ஊக்குவிக்கிறது. இது அதிகாரப் பரவலாக்கத்தின் அடிப்படை நோக்கத்தையும் சிதைத்து விடுவதாகவுள்ளது.

வடக்கு-கிழக்கில் உள்ள பல உள்ளூராட்சிசபைகளில் தேசிய மக்கள் சக்தி தோல்வியடைந்துள்ள நிலையில்,அந்தச் சபைகளின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் அதிகாரத்தை நிலைநிறுத்தி, அவற்றைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர பிரஜாசக்தியை ஒரு கருவியாக அரசாங்கம் பயன்படுத்துவது ஜனநாயகப் பண்பல்ல. மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்துவதை விடுத்து, சீராக இயங்கத் தொடங்கியிருக்கும் உள்ளூராட்சிசபை நிர்வாகங்களில் தேவையற்ற நிழல் குழுக்களை உருவாக்குவதென்பது மக்கள் பணத்தை வீணடிக்கும் செயலே. ஏற்கனவே மாகாணசபைத் தேர்தல்கள் இன்றி மக்கள் பிரதிநிதித்துவம் முடங்கியுள்ளநிலையில், இருக்கும் உள்ளூராட்சிசபைகளையும் முடக்குவது நாட்டில் எஞ்சியிருக்கும் ஜனநாயகத்தையும் குழிதோண்டிப் புதைத்துவிடும். ஆகவே, ஜனநாயகக் கட்டமைப்புக்குச் சவாலாக விளங்கும் இந்த பிரஜாசக்தித் திட்டத்தை அரசாங்கம் உடனடியாகக் கைவிடவேண்டும். நிர்வாகத்தில் மாற்றங்களைக் கொண்டுவர விரும்பினால், அது சட்டபூர்வமான உள்ளூராட்சிசபைகளின் ஊடாகவே அமைய வேண்டுமே தவிர, கட்சிசார்ந்த குறுக்கு வழிகளின் ஊடாக அல்ல என்பதை ஆட்சியாளர்கள் உணர வேண்டும்.




## பாடசாலைச் சீருடையில் சட்டவிரோத நடவடிக்கை

தடுக்கத் தொழில் அமைச்சு நடவடிக்கை

**கொழும்பு, பெப்.3**

**18 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் சட்டவிரோதத் தொழிலில் ஈடுபடுவதும், அதை மறைப்பதற்காக பாடசாலைச் சீருடை அணிவதும் கண்டறியப்பட்டுள்ளது என்று தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.**

ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு, வழங்கிய செவ்வியில் தொழில் அமைச்சின் செயலாளர் எஸ்.எம்.பியதிஸ்ஸ இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சிறுவர்கள் பாடசாலைக் கல்வியை நிறைவுசெய்து வீடு திரும்பும் தோற்றத்தை ஏற்படுத்துவதற்காக, பாடசாலைச் சீருடையை அணிந்து பல்வேறு வருமான மீட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் சம்பவங்கள் கண்டறியப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயத்தில், மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சுடன் இணைந்து சட்டநடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)



## தங்க விலை சரிவு

தங்கத்தின் விலையில் சடுதியான சரிவு ஏற்பட்டுள்ளது. சர்வதேசச் சந்தையில் கடந்த வெள்ளிக்கிழமை ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை 4 ஆயிரத்து 889 அமெரிக்க டொலராகக் காணப்பட்டிருந்த நிலையில், நேற்று ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலையானது 4 ஆயிரத்து 687 டொலராக வீழ்ச்சியடைந்துள்ளது. கொழும்பு செட்டியார் தெருவின் நேற்றுக் காலை தங்க விற்பனை நிலைவரப்படி, ஒரு பவுன் தங்கத்தின் விலை 12 ஆயிரம் ரூபா வரை குறைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று 22 கரட் பவுண் ஒன்று 3 இலட்சத்து 38 ஆயிரத்து 600 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது. 24 கரட் பவுண் ஒன்று3 இலட்சத்து 68 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. (எ-இ)



## இஞ்சியின் விலை சடுதியாக உயர்வு!

கொழும்பு, பெப்.3

உள்ளூர் சந்தையில் இஞ்சியின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது என்று வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். ஒரு கிலோகிராம் இஞ்சி தற்போது ஆயிரத்து 500 தொடக்கம் 2 ஆயிரம் ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றது.

'டித்வா' புயலால் இஞ்சிச் செய்கைகள் அழிவடைந்ததன் காரணமாக உள்ளூர் சந்தையில் இஞ்சிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது. (ச)

## திருமலை பிக்குகளின் விளக்கமறியல் நீடிப்பு

திருகோணமலைப் பகுதியில் புத்தர் சிலை வைக்கப்பட்டமை தொடர்பான சம்பவத்தின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்ட பலாங்கொட கஸ்ஸப தேரர் உள்ளிட்ட நான்கு பிக்குகள் மற்றும் மேலும் 5 சந்தேக நபர்களின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு திருகோணமலை நீதவான் நீதிமன்றில் நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ச-50)



## சீரற்ற காலநிலை; அறுவடை பாதிப்பு

மழையுடனான காலநிலை காரணமாக பெரும்போக நெற்செய்கையின் அறுவடைப்பணிகள் பாதிப்படைந்துள்ளன என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் தற்போது அறுவடைப்பணிகள் இடம்பெற்று செய்யப்பட்ட நெல்கள் உலரவிடப்பட்டிருந்த நிலையில் அண்மையில் பெய்துவரும் மழையால் அவை நனைந்து பாதிப்புக்குள்ளாகியுள்ளன. அதேவேளை வயல்களிலும் நெல் அறுவடை மேற்கொள்ள முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ச-17)

**நாளை**

புதன்கிழமை - தை 21

04.02.2026

சுபநேரம் : 05.05 - 06.35

ராகுகாலம் : 12.35- 02.05

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசியமட்ட உதைபந்தாட்டம்

# மகாஜனக்கல்லூரி இரட்டைச்சம்பியன்

**யாழ்ப்பாணம், பெப்.3**

**இலங்கை கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட தேசியமட்ட பாடசாலைகளுக் கிடையிலான உதைபந்தாட்டத் தொடரில் யாழ்ப்பாணம் தெல்லிப் பழை மகாஜனக் கல்லூரிப் பெண்கள் அணி இரு வேறு வயதுப்பிரிவுகளில் சம்பியன் பட்டங்களை வென்று சாதனை படைத்துள்ளது.**



20 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவுக்கான இறுதியாட்டத்தில் மகாஜனக் கல்லூரி அணியை எதிர்த்துப் பொலநறுவை றோயல் கல்லூரி அணி மோதியது. ஆட்ட நேர முடிவில் இரு அணிகளும் சமநிலையில் இருந்தன.

இதனையடுத்து வெற்றியாளரைத் தீர்மானிக்க வழங்கப்பட்ட சமனிலை தவிர்ப்பு உதை முறையில் மகாஜனக் கல்லூரி அணி அபாரமாகச் செயற்பட்டு வெற்றியைத் தன்வசப்ப டுத்தியது.

17 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவின் இறுதியாட்டத்தில் மகாஜனக் கல்லூரி அணியும் குருநாகல் மலியதேவாக் கல்லூரி அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய மகாஜன வீராங் கனைகள், எதிரணியினருக்கு எவ்வித வாய்ப்பையும் வழங்கவில்லை.

ஆட்ட நேர முடிவில் 50 என்ற கோல் கணக்கில் மகாஜனக் கல்லூரி அணி வெற்றி பெற்று தேசிய சம் பியனாகியது. (ச)


## பணியாளர் தேவை

சாவகச்சேரி நகர் பகுதியில் இயங்கிவரும் வெதுப்பக உற்பத்தி பொருட்கள் விற்பனை நிலையத்திற்கு பெண் பிள்ளைகள் வேலைக்கு தேவை.

**076 298 3245**

## காணி உடனடி விற்பனைக்கு

யாழ். அரியாலையில் 24 பரப்பு குடியிருப்புக் காணி உடனடி விற்பனைக்கு. 3 அறை வீடு, 2 கிணறுகள், 40 தென்னை மரங்கள் கொண்டது. A-9 கண்டி வீதி 200 மீ தூரத்தில். யாழ். நகர் 15 நிமிடம்.

விபரங்களுக்கு:
**074 300 7992**
WhatsApp +44 7414 942508

## பெயர்மாற்றம்

பெருங்குளம் வீதி, சாவகச்சேரியில் வசிக்கும் குமாரசாமி சண்முகதாசன் ஆகிய நான் எனது பெயரை குமாரசாமி சண்முகநாதன் என மாற்றம் செய்கின்றேன்.

குமாரசாமி சண்முகநாதன்


## நகராட்சி மன்றம், சாவகச்சேரி
## குத்தகை கேள்வி அறிவித்தல் - 2026

சாவகச்சேரி நகராட்சி மன்ற அதிகார எல்லைக்குட்பட்ட , கீழ் குறிப்பிடப்படுகின்ற கருவாட்டுக்கடை இல - 02, கருவாட்டுக்கடை இல - 03 என்பனவற்றுக்கு 2026 ஆம் ஆண்டு மார்ச் 01 ஆம் திகதி தொடக்கம் 2026 டிசம்பர் 31 ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன

01. குத்தகைக்கான கேள்விப் பத்திரங்களை கீழ்க்குறிப்பிட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணம், மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணம் என்பவற்றை செலுத்தி நகராட்சி மன்ற அலுவலகத்தில் 2026.02.03 ஆம் திகதி தொடக்கம் 2026.02.16 ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் மு.ப 9.30 - பி.ப 2.30 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திரங்களை பெறுபவர் தமது தேசிய அடையாள அட்டையுடன் அதன் போட்டோ பிரதியையும் கிராமசேவகரினால் வழங்கப்பட்டு பிரதேச செயலரினால் மேலொப்பமிடப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

    கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி :- 2026.02.17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணி
    கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி :- 2026.02.17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணி

02. கேள்விப் பத்திரங்கள் இரு பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்டுதனித்தனியாக மூலப்பிரதி, இணைப்பிரதி என இரு உறைகளில் வைத்து தவிசாளர், நகராட்சி மன்றம்,சாவகச்சேரி என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக குறிப்பிடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடுதல் வேண்டும். 2026.02.17 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது
03. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரமுண்டு.
04. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுனராக பட்டியலிடப்பட்டவர்களுக்கு கேள்விப் படிவம் வழங்கப்படமாட்டாது என்பதுடன் படிவம் வழங்கப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.
05. ஏற்றுக் கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.
06. கேள்விகள் திறக்கப்படும் அத்தருணம் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
07. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் தாங்கள் தெரிவு செய்யப்பட்டமை தொடர்பாக அறிவிக்கப்பட்ட கடிதத்திகதியிலிருந்து 07 நாட்களுக்குள் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை செலுத்தி சபையுடன் நிபந்தனைகளை உள்ளடக்கிய ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ள வேண்டும்.
08. கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

2026 ஆம் ஆண்டு இரண்டு கருவாட்டுக்கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்கான குத்தகை அட்டவணை

| இல | குத்தகை விபரம் 2026.03.01 - 2026.12.31 | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (இதரவரிகள் தவிர) | கேள்வி வைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (இதர வரிகள் தவிர) (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|
| 02 | கருவாட்டுக் கடை இல : 02 | 162,800..00 | 1,700.00 | 2,000.00 |
| 03 | கருவாட்டுக் கடை இல : 03 | 162,800.00 | 1,700.00 | 2,000.00 |

- குறிப்பு :- இந்நகராட்சி மன்றத்தின் கருவாட்டுக் கடையிலிருந்து **1/2Km** சுற்று வட்டத்திற்குள் தனியார் எவரும் கருவாடு விற்பனை செய்ய அனுமதிக்கப்படமாட்டார்கள்.
- உற்பத்தியாளர்களினால் சந்தைக்கு கொண்டு வரப்படும் விவசாய உற்பத்திப்பொருட்களுக்கு 10% கழிவு நடைமுறையினை பின்பற்ற முடியாது.

தவிசாளர்
நகராட்சி மன்றம்
சாவகச்சேரி

2026.02.03.


## வேலையாட்கள் தேவை

**கல்வியங்காட்டில் இயங்கும் ஹோட்டல் ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.**

தொடர்புகளுக்கு:- **077 9292 093**

(CS60834) J-1


## மரண அறிவித்தல்



தோற்றம் 20 - 11 - 1930

மறைவு 01 - 02 - 2026

### கணபதிப்பிள்ளை இராசலிங்கம்

யாழ்ப்பாணம், இராணி வீதியை பிறப்பிடமாகவும், 102 ஆடியபாத வீதியை வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை இராசலிங்கம் அவர்கள் கடந்த (01.02.2026) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பத்மாவதி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நல்லம்மா, சுந்தரலிங்கம் அகியோரின் அன்புச் சகோதரனும், ரஜனி, ரஞ்சன் காலஞ்சென்ற மோகன் ஆகியோரின் அன்புத் தந்தையும், நாகசோதி, சிவகௌரி ஆகியோரின் அன்பு மாமனாரும், சறோஜினிதேவி, மகேஸ்வரன், புஸ்பராணி, விக்கினேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜானகி - சுரேஸ், ஜெகன் - ஜேனுயா, ஆனந்த் - கௌசலா, பிரதீசன், பிரதீப், துசி சஜி, ஆதவன் ஆகியோரின் அன்புப் பேரனும், பார்வதி, ரித்விக், நிலவன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.02.2026) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின் றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**
**077 233 8896, 021 223 1240**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அம்பாறை அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு பிரதேச செயலகப் பிரிவில் இயங்கிவரும், அம்மன் மகளிர் இல்லத்துக்கு, சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தினரால் கடந்த புதன்கிழமை உதவிகள் வழங்கப்பட்டன. (க-66)



திருநெல்வேலி தெற்கு பரமேஸ்வராச்சந்தி ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்தத் திருவிழாவின் கைலாசவாகன உற்சவம் கடந்த புதன்கிழமை இரவு பக்திபூர்வமாக நடைபெற்றது. மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட கைலாசவாகனத்தில், விநாயகப் பெருமானும், சிவலிங்கப் பெருமானும் வீதி உலா வந்ததுடன், கண்கவர் வாண வேடிக்கைகளும் நிகழ்த்தப்பட்டன. (க-66)



மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயத்தில் புதிதாக இணைந்த மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா வித்தியாலய அதிபர் தலைமையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. (ச-41-9)



சாவகச்சேரி கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தியாலயத்தில் தரம் ஒன்றில் புதிதாக இணைந்த மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. (ச-41-9)

மீசாலை கமலாம்பிகை வித்தியாலயத்தில் தரம் ஒன்றில் இணைந்த மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா கடந்த வியாழக்கிழமை வித்தியாலய அதிபர் தலைமையில் நடைபெற்றது. இதன்போது புதிதாக இணைந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ச-41-9)





மன்னார் வலயத்தின் 2026ஆம் ஆண்டுக்கான கால்கோள் விழா, பேசாலை சென்.மேரிஸ் பெண்கள் வித்தியாலயத்தில் வித்தியாலய முதல்வர் திருமதி ஜே.எஸ். விவியன் பீரிஸ் தலைமையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. (க-56)



வட்டுக்கோட்டை கார்த்திகேய வித்தியாசாலையின் கால்கோள் விழாவில், சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அதிபர் மற்றும் சங்கானை தேசிய சேமிப்பு வங்கியின் உதவி முகாமையாளர் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். (க)





கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் கால்கோள் விழா அதிபர் கே.தவகீஸ்வரன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. (ச-17)

புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் தரம் ஒன்று மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா உப அதிபர் அ. மதன்ராஜ் தலைமையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. (ச)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படங்கள்: ஐ. சிவசாந்தன்






வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தில் தைப்பூசத் திருநாள் சிறப்பு வழிபாடுகள் நேற்றுமுன்தினம் தினம் ஞாயிற்றுக்கிழமை மிக சிறப்பாக நடைபெற்றன. மாலை விசேட பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து வசந்த மண்டபப் பூஜை இடம்பெற்று, வள்ளி, தெய்வானை சமேதரராய் வேல் பெருமான் திருமஞ்சத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருட்காட்சியளித்தார். (ச-17)



'வடலி அம்மன்' என அழைக்கப்படும் சுன்னாகம் மயிலணி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. (எ-41-66)



வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயத் தைப்பூச உற்சவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. முருகப்பெருமானுக்குச் சிறப்பு அபிஷேக ஆராதனைகள், வசந்தமண்டபப் பூஜைகள் இடம்பெற்றன. தொடர்ந்து முருகப்பெருமான் உள்வீதி எழுந்தருளி உலா வந்தார். (எ-41-66)



மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்தத் தைப்பூசத் திருமஞ்சத் திருப்பவனி நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு நூற்றுக்கணக்கான அடியவர்களின் பங்கேற்புடன் பக்திபூர்வமாக இடம்பெற்றது. (க-66)



நீர்வேலி கந்தசுவாமி கோயிலில் தைப்பூசத் திருநாளான நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை சிறப்புப் பூஜைகள் இடம்பெற்று சுவாமி திருமஞ்சத்தில் வீதி வலம் வந்தார். (எ-41-17)

## இணுவில் கந்தனின் மஞ்சத் திருப்பவனி

யாழ்ப்பாணம், பெப்.3

வரலாற்றுச் சிறப்புமிக்க இணுவில் கந்தசுவாமி கோவிலின் தைப்பூசப் பெருமஞ்சத் திருவிழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பல்லாயிரக்கணக்கான அடியவர்களின் பங்கேற்புடன் மிகவும் பக்திபூர்வமாக இடம்பெற்றது. ஆறுமுகப் பெருமான் வள்ளி, தெய்வானை சமேதரராய் எழுந்தருளி நூற்றாண்டு கடந்த பழமை வாய்ந்த உலகப் பெருமஞ்சத்தில் ஆரோகணித்தார். சிறப்புத் தீபாராதனை வழிபாடுகளைத் தொடர்ந்து அடியவர்களின் அரோகராக் கோஷம் முழங்க இரவு 7.30 மணியளவில் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட உலகப் பெருமஞ்சத் திருப்பவனி ஆரம்பமானது. (ச-66)





வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் தைப்பூசத் திருவிழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.
சிறப்பு அபிஷேக பூஜை வழிபாடுகளைத் தொடர்ந்து சந்நிதி வேற்பெருமான் அடியவர்கள் புடைசூழ வீதியுலா வந்தார். (ச-41-66.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சண்டிலிப்பாய் கல்வளை ஸ்ரீ காளிஅம்பாள் ஆலய மணவாளக்கோல உற்சவம் அண்மையில் நடைபெற்றது. (ம-40)

# இழப்பீடுகள் வழங்கல்; மன்னாரில் தெளிவூட்டல்

மன்னார், பெப்.3

மன்னார் மாவட்டத்தில் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான இழப்பீடுகளை வழங்குவது தொடர்பான விசேட தெளிவூட்டும் செயலமர்வு கடந்த வெள்ளிக்கிழமை மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. மன்னார் மாவட்டச்செயலர் க. கனகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் இழப்பீட்டு அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகம் விசேட அதிதியாகக் கலந்துகொண்டு நடைமுறைகள் குறித்து விளக்கமளித்தார். (ச-இ)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 15 . 06 . 1943



மறைவு 04 . 01 . 2026

### செல்வி குழந்தைவேலு தேவமனோன்மணி

எங்கள் அன்புத் தெய்வமே!
உங்களை விட்டுப் பிரிந்து ஒரு மாதமாகிறது
உங்கள் நினைவுடன்
உங்களை எண்ணி தவிக்கிறோம்.
உங்கள் குரல் கேட்காதா என்று
ஏங்கித் தவிக்கிறோம்.
எம்மை பிரிந்து சென்றதேனோ?
உங்கள் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

'கோகுலம்'
சங்கத்தானை, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(CR 47009) A

## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றும் **திருமதி P.தீபா** அவர்களின் அன்புத் தந்தை

**இராசதுரை புஸ்பராசா**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தாதிய நலன்புரிச் சங்கம்**
**போதனா வைத்தியசாலை**
**யாழ்ப்பாணம்.**

(CS 31136) A

## 31ம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 04.01.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் நாகமுத்து மகேந்திரன்

அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (03.02.2026) செவ்வாய்க்கிழமை அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி.

குடும்பத்தினர்
076 688 2333

(CS/31135) J-1

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 21 . 08 . 1944



ஆண்டவன் அடியில் 11 . 02 . 2020

### அமரர் வேலாயுதர் காசிநாதர்

(ஓய்வுபெற்ற வயோதிபர் இல்ல பணியாளர்)
திதி: அமரபக்க துதியை - 03.01.2026

தாங்கிப் பிடிக்க பல
உறவுகள் இருப்பினும்
தந்தை இல்லாத வாழ்க்கை
தவிக்கத்தான் விடுகிறது.....

ஆயிரம் ஆண்டு தவம் இருந்தும்
கிடைக்கா உறவொன்று
இடை வழியில் சென்றதுவே
வாழ வழிகாட்டிய தீபமொன்று
இடைவழியே ஒளி இழந்து நின்றதுவே

காலங்கள் போகலாம் காயங்கள் மாறலாம்
நெஞ்சில் உள்ள உங்கள் நினைவுகள்
என்றும் எங்களை விட்டு போகாது.
உங்கள் நினைவுகளை காலமெல்லாம்
நாங்கள் சுமந்து நிற்போம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

ஈஸ்வரி பவனம்
கைதடி கிழக்கு, கைதடி.

என்றென்றும் உங்கள் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்

(CS/60636) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கீரிமலை வலித்தூண்டல் றோ.க.த.க. பாடசாலையின் 2026 ஆம் ஆண்டுக்கான கால்கோள் விழா அதிபர் ஜெ.ஜெய கிறிஸ்ரோ தலைமையில் அண்மையில் நடைபெற்றது. (எ-41-63)



யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியின் தரம் ஒன்று புதுமுக மாணவர்களை வரவேற்கும் கால்கோள்விழா கல்லூரியின் மஹ்மூத் மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. அதில் தரம் ஒன்று மற்றும் தரம் இரண்டு மாணவர்களின் கலைநிகழ்வுகள் நடைபெற்றன. (எ-41)



கைதடி குருசாமி வித்தியாலயத்தின் தைப்பொங்கல் விழா அதிபர் ச.அகிலன் தலைமையில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (எ-41-159)



## சட்டவிரோத மணலகழ்வு; தடுக்குமாறு கோரிக்கை

கிளிநொச்சி, பெப்.3

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மையில் நிலவிய புயல் மற்றும் வெள்ளப்பெருக்கைச் சாதகமாகப் பயன்படுத்தி சட்டவிரோத மணலகழ்வு இடம்பெற்று வருகின்றது என்று விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர். வெளிகண்டல் ஆற்றுப்பகுதியில் இரவு நேரங்களில் சட்டவிரோத மணலகழ்வு இடம்பெற்று வருகின்றது. இவ்வாறு அள்ளப்படும் மணல், டிப்பர் வாகனங்கள் மூலம் வேறு பகுதிகளுக்குக் கடத்திச் செல்லப்படுகிறது.

இவ்வாறு இயற்கை வளங்கள் சூறையாடப்படுவதை உடன் தடுத்துநிறுத்த வேண்டும் என்றும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-113)



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் யோக லிங்கேஸ்வரர் ஆலயத்தில் தைப்பூச வழிபாடு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்றது. தொடர்ந்து ஏடு தொடக்கும் நிகழ்வை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் ஆரம்பித்துவைத்தார். (எ-41-66)





இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலயத்தில் ஐந்தாவது மகா கும்பாபிஷேகம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆயிரக்கணக்கான அடியவர்கள் சூழ இடம்பெற்றது. (எ-41-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் கால்கோள் விழா கல்லூரி அதிபர் ம.தயானந்தன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. (எ-41-63)

## நல்லை ஆதீனத்தில் கலைவகுப்புக்கள்

யாழ்ப்பாணம், பெப்.3

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் இலவசக் கலைவகுப்புகள் நல்லைத் திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் ஆரம்பமாகவுள்ளது.

துறைசார் நிபுணத்துவம் பெற்ற வளவாளர்களினால் வாராந்தம் இந்த வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

மிருதங்கம், வயலின், பண்ணிசை, கர்நாடக சங்கீதம், வீணை, பரதநாட்டியம், யோகாசனம், சிலம்பம் ஆகிய வகுப்புகளில் தரம் 1 தொடக்கம் உயர்தரம் வரை கல்விகற்கும் மாணவர்கள் மற்றும் ஆண்கள், பெண்கள் இருபாலரும் கலந்துகொண்டு பயன் பெற்றுக்கொள்ளமுடியும். விண்ணப்பிக்க விரும்புவோர் காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுப் பதிவுசெய்து கொள்ளமுடியும் என இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ச)

### குற்றவாளிக்கு...

வில் கலந்துகொண்ட இருவருக்கு இடையில் வாக்குவாதம் ஏற்பட்டு, கைகலப்பாக மாறியதில் அர்ச்சுனன் ரஜீபன் (வயது-19) என்ற இளைஞர் படுகொலை செய்யப்பட்டார்.

இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்த புதுக்குடியிருப்புப் பொலிஸார், சந்தேகநபரைக் கைது செய்ததுடன், அவரை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தியிருந்தனர். இந்த வழக்கு ஆரம்பத்தில் வவுனியா மேல் நீதிமன்றத்திலும், பின்னர் கிளிநொச்சி மேல் நீதிமன்றத்திலும் இடம்பெற்றன. வழக்கின் விசாரணைகள் ஏற்கனவே நிறைவு பெற்றிருந்த நிலையில், கிளிநொச்சி மேல் நீதிமன்ற நீதிபதி அலெக்ஸ்ராஜா முன்னிலையில் தீர்ப்புக்காக வழக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போதே, சந்தேகநபரை குற்றவாளியாக அறிவித்த நீதிமன்றம் மரண தண்டனை விதித்து உத்தரவிட்டது. அனைத்து மின் விளக்குகளும் அணைக்கப்பட்டு, அனைவரும் எழுந்து நிற்கத்தக்கதாக இந்தத் தீர்ப்பு அறிவிக்கப்பட்டது. (அ-ம-55)

### திசைகாட்டி...

கத் தவறியதைத் தொடர்ந்தே, இந்தப் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (அ-ம)

### இராணுவ...

விபத்தைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் நூற்றுக் கணக்கான பொதுமக்கள் திரண்டதால் பதற்றமான நிலை ஏற்பட்டிருந்தது.

முதியவரின் சடலம் தெல்லிப்பழை மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டதுடன், இராணுவ வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டார். இராணுவப் பொலிஸாரும், பலாலிப் பொலிஸாரும் இணைந்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-66)

### தெளிவான...

இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் சாகர காரியவசம் மேலும் தெரிவித்ததாவது:-

ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டணி அமைப்பது தொடர்பில் பொதுஜன பெரமுன பேச்சு நடத்தவில்லை. எமது கட்சிக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் கொள்கை வேறுபாடுகள் உள்ளன. ஒற்றையாட்சி, தேசியத்துவம் உள்ளிட்ட விடயங்களில் இரு கட்சிகளினதும் நிலைப்பாடுகள் வேறானவை.

எமது கொள்கையை ஏற்பவர்கள் எம்முடன் இணைந்து செயல்படலாம். கொள்கையே எமக்கு முக்கியம். ஆதலால், கொள்கையைக் கைவிட்டு நாங்கள் எவருடனும் கூட்டணி அமைக்க மாட்டோம். அத்தகைய கூட்டணி எமக்கு அவசியமில்லை - என்றார். (அ-ம-44)

### வயிற்றோட்டத்தால்...

மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையிலேயே, நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்தான்.

வயிற்றோட்டத்தால் உடலில் நீர்த்தன்மை குறைந்து, கிருமித்தொற்று ஏற்பட்டு இறப்புச் சம்பவித்துள்ளது என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரியவந்துள்ளது. இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

### சபாநாயகர்...

குலரத்னவே இந்த முறைப்பாட்டை வழங்கியுள்ளார்.

சபாநாயகருடன் ஏற்பட்ட தனிப்பட்ட தகராறு காரணமாகவே தான் பணி இடைநீக்கம் செய்யப்பட்டதாகவும், சபாநாயகரின் ஊழல் நடவடிக்கைகள் குறித்தும் அந்த முறைப்பாட்டில் பதிவு செய்துள்ளதாகவும் சமிந்த குலரத்ன தெரிவித்தார். (அ-ம)

### ஈழத்...

இந்தக் கையெழுத்துப் போராட்டம் இடம்பெற்று வருகின்றது. அத்துடன், ஈழத் தமிழர்களுக்கு நீதியை வலியுறுத்தி, தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் ஏற்பாட்டில் போராட்டமும் பேரணியும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் பொதுச்செயலாளர் வேணுகோபால் தெரிவித்ததாவது:-

செம்மணி மனிதப் புதைகுழியில் எங்கும் தோண்டத் தோண்ட என்புக்கூடுகளே தென்படுகின்றன. அத்துடன், ஈழத்தில் இடம்பெற்ற இனப்படுகொலை தொடர்பில் ஏராளமான ஆதாரங்கள் ஐக்கிய நாடுகள் சபைக்கு வழங்கப்பட்டுள்ளன. ஆனால், ஐக்கிய நாடுகள் சபை கனதியான நடவடிக்கைகள் எவற்றையும் இதுவரை எடுக்கவில்லை. இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலை என்று அறிவிப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபைக்கு இன்னும் எத்தனை ஆதாரங்கள் வேண்டும்? - என்றார். (அ-ம-100)

### அநுர...

கள் தொடர்பில் நிமல் சிறிபாலடி சில்வா நேற்று விசேட ஊடக சந்திப்பை நடத்தியுள்ளார். இதன் போதே, ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கம், எதிரணிகளின் எவ்வித முயற்சிகளும் இல்லாமல் விரைவில் கவிழும் என்று கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் உள்ளக மோதல்கள் உள்ளன என்று கூறுகின்றனர். உள்ளக மோதல்கள் இல்லாத கட்சிகள் எங்கும் இல்லை. ஆளும்கட்சிகூட பிளவுபட்டுத்தான் உள்ளது. எனவே, இதிலிருந்து மீண்டு நாங்கள் கட்சியைக் கட்டியெழுப்ப வேண்டும்.

மிகவும் தவறான வழியிலேயே அரசாங்கம் பயணித்து வருகின்றது. அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு நாங்கள் எதையும் செய்ய வேண்டியதில்லை. அவர்களாகவே கவிழ்வார்கள். இது நிச்சயம் நடக்கும் - என்றார். (அ-ம-44)

### இனப்...

வவுனியா வடக்கில் பல தமிழ்க் கிராமங்களை உள்ளடக்கி 7 பில்லியன் ரூபா செலவில் கிவுல் ஓயாவை உருவாக்குவதற்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் அரசாங்கம் திட்டமிட்டிருந்தது. இந்த நிலையில், தற்போதைய அரசாங்கம் அந்தத் திட்டத்தை தொடர்ச்சியாக முன்கொண்டு செல்லத் தீர்மானித்துள்ளதுடன், இதற்கான நிதியொதுக்கீட்டையும் 2 பில்லியன் ரூபாவால் அதிகரித்துள்ளது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைக்கு தமிழ்க் கட்சிகள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்திருந்தன. இதன் தொடர்ச்சியாகவே, வவுனியா வடக்கில் நேற்றுப் பெரும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஒன்றிணைந்த தமிழ்க் கட்சிகளின் ஏற்பாட்டில், வவுனியா நெடுங்கேணி பேருந்து நிலையத்துக்கு முன்பாக ஆரம்பமான இந்தப் போராட்டம், வவுனியா வடக்கு பிரதேச செயலகம் வரை பேரணியாகச் சென்றது. வவுனியா வடக்குப் பிரதேச செயலகத்துக்கு முன்பாக இடம்பெற்ற போராட்டத்தைத் தொடர்ந்து, ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பதற்காக வவுனியா வடக்கு பிரதேச செயலரிடம் மனு ஒப்படைக்கப்பட்டது.

கிவுல் ஓயா திட்டம் தொடர்பில் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்ததாவது:-

கிவுல் ஓயா திட்டம் உருவாக்கப்பட்ட 15 ஆண்டுகள் கடந்துள்ள போதிலும், இதுவரை பிரதேச மக்களுடனோ அல்லது பிரதேச அபிவிருத்திக் குழுக்களுடனோ கலந்துரையாடப்படவில்லை. மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டங்களில் இது தொடர்பில் விரிவாக விவாதிக்க வேண்டும் என்று பலமுறை நாங்கள் கோரிய போதிலும், இதுவரை அந்தக் கோரிக்கை செவிசாய்க்கப்படவில்லை. எனவே, சர்வாதிகாரமான முறையில் கொண்டுவரப்படும் இந்தத் திட்டத்தை நாங்கள் மிகவும் தீர்க்கமாக எதிர்ப்போம்.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட 13 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான நிலம் வனவள திணைக்களத்தால் மகாவலி அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்கள் தமது விவசாயத் தேவைக்காக வேலி அடைப்பதற்கு தடிகளை வெட்டினால்கூட உடனடியாக நடவடிக்கை எடுக்கும் வனவளத் திணைக்களம், 13 ஆயிரம் ஏக்கரை தாரைவார்த்திருப்பது, கூட்டுச் சதியின் வெளிப்பாடாகவே அமைந்துள்ளது. தமிழர்களின் இனப்பரம்பலை மாற்ற வேண்டும் என்ற தீய நோக்கமே இதற்கெல்லாம் பிரதான காரணமாக உள்ளது - என்றனர். (அ-ம-110)

### கடலாமை...

விசேட தேடுதல் நடவடிக்கையின் அடிப்படையிலேயே மேற்படி சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து 17 கிலோ இறைச்சியும், 39 ஆமை முட்டைகளும் மீட்கப்பட்டன. சான்றுப் பொருள்களுடன் அவர்கள் பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. (அ-ம-56)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### ஈரானில் இடம்பெறும் தாக்குதலில்

# ஒரு ரஷ்யர் கொல்லப்பட்டாலும் ரஷ்யா போரில் களமிறங்கும்!

## அதிபர் புடின் மிரட்டல்



**மொஸ்கோ, பெப்.3**

**ஈரானில் ஒரு ரஷ்யர் கொல்லப்பட்டாலும், இந்த மோதலை ரஷ்யாவுக்கு எதிரான போராகக் கருதுவோம் என ரஷ்ய அதிபர் புடின் மிரட்டல் விடுத்துள்ளார்.**

ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான முறுகல்நிலை ஒவ்வொருநாளும் உச்சம் பெற்று வருகின்றது. ஈரானின் அணுசக்தித் தளங்களே அமெரிக்காவின் பிரதான தாக்குதல் இலக்கு என்று, ரஷ்ய உளவுத்துறை எச்சரித்துள்ளது. இவ்வாறான நிலையிலேயே, 'ஈரானில் ஒரு ரஷ்யர் கொல்லப்பட்டாலும் போரில் ரஷ்யா தலையிடும்' என்று புடின் மிரட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

ஈரானின் அணுசக்தித் தளங்களில் ரஷ்ய விஞ்ஞானிகள் ஏராளமானவர்கள் பணியாற்றி வருகின்றனர். நீண்ட நட்புறவின் அடிப்படையிலேயே, அவர்கள் அங்கு பணிபுரிகின்றனர். எனவே, ஈரானில் மேற்கொள்ளப்படும் தாக்குதலால் ஒரு ரஷ்யர் கொல்லப்பட்டாலும், இந்த மோதல் ரஷ்யாவுக்கு உரியதாக மாறும்-என்றார். இதேவேளை, புதிய ஒப்பந்தமொன்றுக்கு வருமாறு ஈரானுக்கு அமெரிக்கா வழங்கிய 36 மணிநேர அவகாசத்தை ஈரான் தீர்க்கமாக நிராகரித்துள்ளது.

'அமெரிக்க மிரட்டல்களுக்குத் தமது தேசம் தலைகுனியாது' என்று ஈரானிய வெளிவிவகார அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது. (ம)



# ஆட்சிமாற்றத்துக்கு வாய்ப்பே இல்லை!

## ஈரானிய அரசு அறிவிப்பு

தெஹ்றோன், பெப்.3

ஈரானில் ஆட்சிமாற்றம் என்பது வெறும் கற்பனை. சிலர் இந்த மாயையில் விழுந்து விட்டார்கள் என்று ஈரானிய வெளிவிவகார அமைச்சர் அரக்சி கூறியுள்ளார்.

ஈரானில் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்துவதில் உறுதியாக உள்ளதாகவும், அதற்கேற்பவே இராணுவ நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதிபர் ட்ரம்ப் கடந்த சனிக்கிழமை தெரிவித்திருந்தார். இதற்குப் பதிலடியாகவே, 'ஈரானில் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்துவது சாத்தியமற்ற விடயம். அத்தகைய பலவீனமான நிலைகளை நாங்கள் கடந்துவிட்டோம்' என அமைச்சர் அரக்சி தெரிவித்துள்ளார்.

எங்களின் நாடு மிகவும் வலுவானது. எமது அமைப்பு, மிகவும் ஆழமாக வேரூன்றியுள்ளது. தனிநபர் ஒருவரை நம்பி எமது நாட்டின் முழுக்கட்டமைப்பும் இல்லை. தனிநபர்களின் இருப்பு அல்லது இல்லாமை எந்த வித்தி யாசத்தையும் ஏற்படுத்தாத அளவுக்கு வலுவான அடித்தளங்களை நாம் உருவாக்கியுள்ளோம் என்றும் அமைச்சர் அரக்சி மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம)

# உதயநிதி முதல்வராவது ஒருபோதும் நடக்காது!

## சொல்கின்றார் எடப்பாடி

சென்னை, பெப்.3

உதயநிதி தமிழகத்தின் முதல்வராகப் பதவியேற்பது ஒருபோதும் நடக்காது என்று அ.தி.மு.க.வின் பொதுச்செயலரும், முன்னாள் முதல்வருமான எடப்பாடி பழனிச்சாமி தெரிவித்துள்ளார். அ.தி.மு.க.வின் தேர்தல் பரப்புரைக் கூட்டமொன்று சேலம் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதில், எடப்பாடி பழனிச்சாமி கலந்துகொண்டு உரையாற்றினார்.

இதன்போதே, 'தமிழகத்தில் இருந்து குடும்ப ஆட்சி அடியோடு அகற்றப்படும். உதயநிதி ஸ்டாலின் முதல்வராகப் பதவியேற்பது ஒருபோதும் நடக்காது' என்று கூறியுள்ளார். கடந்த தேர்தலில் தி.மு.க.வுக்கு வாக்களித்தமை எவ்வளவு பெரிய தவறு என்று மக்கள் தற்போது உணர்ந்துள்ளனர். ஆதலால் தி.மு.க.வால் ஆட்சியைத் தக்கவைக்கவோ, அல்லது இனியொருபோதும் ஆட்சியைக் கைப்பற்றவோ முடியாது. எதிர்வரும் சட்டப்பேரவைத் தேர்தலே தி.மு.க.வுக்கு இறுதித்தேர்தல் என்றும் எடப்பாடி பழனிச்சாமி தெரிவித்துள்ளார். (ம)





# அனைத்துக் கட்சிகளுக்கும் தடை விதித்து உத்தரவு!

## 'கப்டன்' ட்ராரோ அதிரடி

ஒவாகடூகோ, பெப்.3

புர்க்கினா பெசோ நாட்டில் உள்ள அனைத்து அரசியற்கட்சிகளுக்கும், அந்த நாட்டின் இராணுவ ஆட்சியாளர் அதிரடியாகத் தடைவிதித்து உத்தரவிட்டுள்ளார்.

2022ஆம் ஆண்டு இராணுவப் புரட்சிமூலம் புர்க்கினா பெசோவின் அதிகாரத்தை 'கப்டன்' இப்ராஹிம் ட்ராரோ கைப்பற்றினார். தனது நாட்டை மேம்படுத்தும் நோக்கில், பல்வேறு சீர்திருத்தங்களை அவர் நடைமுறைப்படுத்தி வருகின்றார். இதன் தொடர்ச்சியாகவே, அனைத்து அரசியற் கட்சிகளுக்கும் தடை விதித்து உத்தரவிட்டுள்ளார்.

புர்க்கினா பெசோவில் நூற்றுக்கும் மேற்பட்ட அரசியற்கட்சிகள் உள்ளன. அனைத்துக் கட்சிகளும் மக்களிடத்தில் பிரிவினையை மட்டுமே வளர்க்கின்றன. மக்களைப் பிரித்தாள்வதே கட்சிகளின் நோக்கமாக உள்ளது. நாட்டின் வளர்ச்சிக் கட்டமைப்பில் அருவருப்பான பாதிப்பை அவை ஏற்படுத்துகின்றன என்று தனது முடிவு தொடர்பில் இப்ராஹிம் ட்ராரோ கூறியுள்ளார். (ம)

# பலூசிஸ்தானில் மோதல்; போராளிகள் படுகொலை!

இஸ்லாமபாத், பெப்.3

பாகிஸ்தான் இராணுவம், பலூசிஸ்தானில் மேற்கொண்ட விசேட நடவடிக்கைகள் காரணமாக 70 போராளிகள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. பாகிஸ்தானின் ஒரு பகுதியான பலூசிஸ்தானை தனிநாடாக அறிவிக்கவேண்டும் என்று, பலூச் போராளிகள் போராடிவருகின்றனர். பலூசிஸ்தானின் 18 இடங்களில் இடம்பெற்ற மோதல்களின் போதே, 70 போராளிகள் கொல்லப்பட்டுள்ளனர். (ம)



# எப்ஸ்டீன் கோப்பு; பில்கேட்ஸ் மறுப்பு

ரஷ்யப் பெண்களுடன் தொடர்பில் இருந்தார் என, 'எப்ஸ்டீன் கோப்புகளில்' வெளியான விடயத்தை, உலகப் பணக்காரரான பில்கேட்ஸ் திட்டவட்டமாக நிராகரித்துள்ளார். அமெரிக்காவைச் சேர்ந்த மிகப்பெரும் செல்வந்தரான ஜெப்ரி எப்ஸ்டீன், இளம்பெண்கள் மற்றும் சிறுமியரை பாலியல் தொழிலில் ஈடுபடுத்திய குற்றச்சாட்டுக்களுக்காக 2008ஆம் ஆண்டில் கைதுசெய்யப்பட்டார். இந்த வழக்கில், 18 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதை அடுத்து, புளோரிடா சிறையில் அடைக்கப்பட்டார். ஏறத்தாழ 10 ஆண்டுகளுக்கு பின், 2019ஆம் ஆண்டு ஜூலை 6ஆம் திகதி மீண்டும் பாலியல் குற்றச்சாட் டில், எப்ஸ்டீன் கைதாகி நியூயோர்க் சிறையில் இருந்தபோது, ஓகஸ்ட் 10ஆம் திகதியன்று தூக்கிட்டு உயிர் மாய்த்தார். அவர் இறந்த பின் அவரோடு தொடர்பில் இருந்த நபர்களின் பெயர்கள் மற்றும் விபரங்கள் அடங்கிய கோப்புகள் நீதிமன்ற உத்தரவுப்படி அவ்வப்போது வெளியிடப்பட்டு வருகின்றன. அந்தவகையில், நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்ட கோப்புகளில், மைக்ரோசொப்ட் நிறுவனரும், தொழிலதிபருமான பில்கேட்ஸ், ரஷ்யப் பெண்களுடன் தொடர்பில் இருந்தார் எனக் குறிப்பிடப்பட்டது. இந்தக் குற்றச்சாட்டு களையே பில்கேட்ஸ் மறுத்துள்ளார். (ம)

வேலைவாய்ப்பு
- கணக்காளர்
- வரவேற்பாளர்
- சமையலாளர்
- உணவுபரிமாறுபவர்
- விற்பனை உதவியாளர் (Fancy Shop)

தொடர்புகளுக்கு:-
077 8514 715
(CS/60631) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.02.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.